**வரவேற்புக் கொள்கை (WELCOME POLICY) என்றால் என்ன?**

ரொறன்ரோ நகரத்திலுள்ள ஏதாவது ஒரு சமூக நிலையத்தின் பொழுதுபோக்குச் செயல்முறைவகுப்புக்களில், வருமானம் குறைந்த மக்கள் பங்கெடுப்பதற்பதற்கான நிதிரீதியான உதவியை Welcome Policy வழங்குகின்றது. பொழுதுபோக்குச் செயல்முறைவகுப்புக்களில் பதிவுசெய்வதற்குப் பாவிக்கக்கூடிய வருடாந்தப் பற்றுத்தொகை ஒன்றைத் தகுதி பெற்ற குடும்பங்களும் தனிநபர்களும் பெறுகின்றார்கள்.

**WELCOME POLICYக்கான வருடாந்தப் பற்றுத்தொகை யாது?**

குழந்தைகளும் இளம்பருவத்தினரும் (0 - 24 வயது) $494க்குத் தகுதியுடையவர்களாக இருக்கின்றார்கள். வயதுவந்தோர் (25 வயதும் அதற்கு அதிகமான வயதினரும்) $230க்குத் தகுதியுடையவர்களாக இருக்கின்றார்கள்.

நீங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளிலிருந்து 12 மாதங்கள் வரை இந்தப் பற்றுத்தொகை செல்லுபடியாகும், அத்துடன் இதை எந்தவொரு பொழுதுபோக்குச் செயல்முறைவகுப்புக்கும் பாவிக்கலாம். அனைத்துப் பருவங்களுக்குமாகத் திட்டமிடுவதை நினைவில் வைத்திருங்கள்: இலையுதிர்கால, பனிக்கால, இலைதளிர்கால மற்றும் கோடைகால பொழுதுபோக்குச் செயல்முறைவகுப்புக்கள்.

**WELCOME POLICYக்கு எப்படி நான் விண்ணப்பிப்பது?**

நீங்கள் சமூக உதவிப்பணத்தைப் பெறுவதுடன் ரொறன்ரோவில் வாழ்கிறீர்கள் எனில், உங்களுக்கு முன்கூட்டிய ஒப்புதல் கிடைக்கும் அத்துடன் உங்களுடைய பற்றுத்தொகை வருடாவருடம் புதுப்பிக்கப்படும். நீங்கள் விண்ணப்பப் படிவம் ஒன்றைப் பூர்த்தி செய்ய **வேண்டியதில்லை.** உங்களுடைய விடயப்பணியாளருடன் (caseworker) கதையுங்கள்.

உங்களுக்குச் சமூக உதவிப்பணம் கிடைப்பதில்லை எனில், விண்ணப்பப் படிவம் ஒன்றை வருடாவருடம் நீங்கள் **பூர்த்தி செய்யவேண்டும்**. விண்ணப்பிப்பதற்கான தகுதியுடையவராக இருப்பதற்கு, பின்வருவன உங்களுக்குப் பொருந்த வேண்டும்:

- 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயது
- ரொறன்ரோவில் வசிப்பவர்

- வருமான வரிக் கழிப்புக்கு முன்பான குடும்ப வருமானம், toronto.ca/wpல் குறிப்பிடப்பட்டிருக்கும், கனடா புள்ளிவிபரவியலின் குறைந்த வருமான வரம்புக்குக் கீழ் இருத்தல்.

விண்ணப்பப்படிவம் ஒன்றைப் பெறுவதற்கு மூன்று வழிகள் உள்ளன:

- விண்ணப்பப்படிவம் ஒன்றை நீங்கள் தபாலில் பெறுவதற்கு, Welcome Policy விண்ணப்ப இணைப்பை 416-338-2000 (TTY 416-338-3195)ல் அழையுங்கள்
- சமூக நிலையங்கள் ஏதாவது ஒன்றில் விண்ணப்பப்படிவம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- விண்ணப்பப்படிவம் ஒன்றை toronto.ca/wpலிருந்து தரவிறக்கம் செய்யுங்கள்.

**<u>எனது விண்ணப்பப்படிவத்தை நான் எப்படிச் சமர்ப்பிப்பது</u>?**

விண்ணப்பப்படிவத்தின் <u>அனைத்துப்</u> பகுதிகளையும் நீங்கள் பூரணப்படுத்துவதை உறுதிசெய்யுங்கள், அத்துடன் ஆதாரமளிக்கும் அனைத்து ஆவணங்களினதும் பிரதிகளை (மூலப் பிரதிகளை அனுப்பாதீர்கள்) அனுப்புங்கள். ஏற்றுக்கொள்ளப்படும் ஆதாரமளிப்பு ஆவணங்களின் பட்டியல் ஒன்றுக்குத் தயவுசெய்து toronto.ca/wpஐப் பார்வையிடுங்கள் அல்லது 416-338-2000 (TTY 416-338-3195)ஐ அழையுங்கள்.

அந்த விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிடுங்கள், ஆதாரமளிக்கும் ஆவணங்களினது பிரதிகளை இணையுங்கள், அதை அனுப்புவதற்குப் பின்வரும் வழிகளில் ஒன்றைத் தெரிவுசெய்யுங்கள்:

- City of Toronto, Welcome Policy Application, 55 John St. – Mailroom, Toronto, Ontario M5V 3C6க்குத் தபாலில் அனுப்புங்கள்.
- உங்களுடைய பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை ஏதாவதொரு ரொறன்ரோ வேலைவாய்ப்பு மற்றும் சமூக சேவைகள் அலுவலத்துக்கு (Toronto Employment and Social Services office) அல்லது நகர மையத்துக்குக் (Civic Centre) கொண்டுபோய்க் கொடுங்கள்.
- 416-338-5046க்குத் தொலைநகலில் அனுப்புங்கள் (தகவல்களை அனுப்புவதற்கு தொலைநகல் பாதுகாப்பான ஒரு வழியல்ல என்பதைத் தயவுசெய்து கவனியுங்கள்).

**நான் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றேனா என்பதை நான் எப்படி அறிவேன்?**

உங்களுடைய பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவமும், ஆதாரமளிக்கும் ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டதும், பின்வருவனவற்றில் ஒன்றைத் தெரிவிக்கும் கடிதம் ஒன்று உங்களுக்குக் கிடைக்கும்:

- o ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறீர்கள் அல்லது
- o மேலதிக தகவல்கள் வழங்கப்பட வேண்டும் அல்லது
- o ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதும் அதற்கான காரணங்களும்

- உங்களுடைய விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதே நாள் அன்று உங்களுடைய வருடாந்தப் பற்றுத்தொகை உங்களுடைய கணக்கில் இடப்படும்.

<u>செயல்முறைவகுப்புக்களுக்குப் பதிவுசெய்தல்</u>

செயல்முறைவகுப்புக்களுக்குப் பதிவுசெய்யும் திகதிகள், செப்ரெம்பர், டிசம்பர், மார்ச் மற்றும் ஜூன் மாதங்களில் இருக்கும். உங்களுடைய வட்டாரத்தில் எப்போது பதிவுசெய்தல் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது என்பதை அறிவதற்குப் பார்வையிடுங்கள் :toronto.ca/torontofun அல்லது அழையுங்கள்: 311.

**பதிவுசெய்தல் 1, 2, 3 எனச் சொல்வது போல மிகவும் சுலபமானது !**

**<u>படிநிலை</u> 1: குடும்ப மற்றும் சேவைபெறுநர் இலக்கங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்**

செயல்முறைவகுப்புக்களுக்கு நீங்கள் பதிவுசெய்வதற்கு, உங்களுடைய குடும்பத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் குடும்ப மற்றும் சேவைபெறுநர் இலக்கங்கள் தேவையாக இருக்கும். Welcome Policyக்கு நீங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதைச் சொல்வதற்காக உங்களுக்கு அனுப்பப்பட்ட உறுதிப்படுத்தல் கடிதத்தில் இந்தத் தகவல்கள் இருக்கும்.

**<u>படிநிலை</u> 2: செயல்முறைவகுப்புக்களைத் தெரிவுசெய்யுங்கள்**

செயல்முறைவகுப்புக்களைக் கண்டறிவதற்கும், பதிவுசெய்வதற்கு விரும்பும் செயல்முறைவகுப்புக்களைத் தெரிவுசெய்வதற்கும், உங்களுடைய வட்டாரத்தில் எப்போது பதிவுசெய்தல் ஆரம்பிக்கப்படும் என்பதை அறிவதற்கும், இணையத்தில் toronto.ca/torontofunஐ அல்லது நகர மண்டபம், நகர மையங்கள், சமூக நிலையங்கள் மற்றும் நூலகங்களில் காணப்படும் FUN Guide செயல்முறைவகுப்புப் பட்டியல்களைப் பாருங்கள்.

**<u>படிநிலை</u> 3: நேரத்துக்குப் பதிவு செய்யுங்கள்**

அனேகமான செயல்முறைவகுப்புக்கள் விரைவில் நிரம்பிவிடும்.
குடும்ப மற்றும் சேவைபெறுநர் இலக்கங்கள் மற்றும் செயல்முறைவகுப்பு விருப்பத்தெரிவுகள் தயாராக இருப்பதை உறுதிசெய்யுங்கள்.

பதிவுசெய்வதற்கு நான்கு வழிகள் உள்ளன:

- இணையம் (Internet): வருகைதாருங்கள்: toronto.ca/torontofun. இணையத்தில் பதிவுசெய்தல், செயல்முறைவகுப்புக்களுக்குப் பதிவுசெய்வதற்கான விரைவான மற்றும் சுலபமான வழியாகும்..
- தொலைபேசி மூலம்: 416-338-0000ல் Touch Tone (TTR) பதிவுசெய்தல்
- செயல்படுத்துனர் உதவியுடன்: 416-338-4386ல் வாடிக்கையாளர் சேவைப் பிரதிநிதி ஒருவர் மூலமாகப் பதிவுசெய்யுங்கள்.
- நேரில்: தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் நேரில் பதிவுசெய்யுங்கள். இந்த இடங்கள் பற்றிய பட்டியல் ஒன்றை, toronto.ca/parks/registrationல் பார்வையிடுங்கள், 311ஐ அழையுங்கள் அல்லது உங்களுடைய உள்ளூர் சமூக நிலையப் பணியாளருடன் பேசுங்கள்.

**உங்களுடைய WELCOME POLICYன் பெருமளவு பயனைப் பெறுவதற்கான குறிப்புகள்**

- தங்களது சொந்தப் பொழுதுபோக்குத் தேவைகளைத் தீர்மானிப்பதற்கும் வழங்கப்படுகின்ற மானியத்தைப் பொருத்தமான முறையில் பயன்படுத்துவதற்குமான நெகிழ்வுத்தன்மை குடும்பங்களுக்கு இருக்கின்றது. **வருடாந்த மானியத்தின் அளவு 12 மாதங்களுக்கும் நீடிக்க வேண்டும்** என்பதை நினைவில் வைத்திருத்தல் முக்கியமாகும்.
- செயல்முறைவகுப்புக்களை அனுபவியுங்கள் அத்துடன் களிப்படையுங்கள், நீங்கள் பதிவுசெய்த செயல்முறைவகுப்பில் உங்களால் கலந்து கொள்ள முடியாமலிருந்தால், ரொறன்ரோ நகரத்தினருக்கு முடியுமான விரைவில் தெரியப்படுத்துங்கள். செயல்முறைவகுப்புக்கள் பிரபல்யமானவை, அவற்றில் பலவற்றுக்குக் காத்திருப்புப் பட்டியல்கள் உண்டு. செயல்முறைவகுப்பில் உங்களால் கலந்து கொள்ள முடியாமலிருந்தால், உங்களுடைய சமூக நிலையத்தைத் தயவுசெய்து தொடர்புகொள்ளுங்கள் அல்லது 416-338-4386ஐ அழையுங்கள். அப்படியானல் அந்த இடம் இன்னொருவருக்கு வழங்கப்பட முடியும். உங்களுடைய Welcome Policy பற்றுத்தொகை மீதியுடன் இந்தப் பற்றுத்தொகை சேர்க்கப்படும் .

**மேலதிக தகவல்களுக்கு, உங்களுடைய உள்ளூர் சமூக நிலையத்திலுள்ள பணியாளருடன் தயவுசெய்து பேசுங்கள்**